தியாகிகள் ஓய்வூதியம் ரூ.11,000 ஆக அதிகரிப்பு!

முதலமைச்சர் ஸ்டாலின் அறிவிப்பு!!

சென்னை, ஆக.15–

சென்னை கோட்டை கொத்தளத்தில் சுதந்திர தினத்தையொட்டி கொடியேற்றிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சிறப்புரை ஆற்றினார். அதன் விவரம் வருமாறு:

இந்திய ஒன்றியத்தின் முக்கியமான அங்கம் நம் தமிழ்நாடு.

தமிழ்நாடு மாநிலத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நான், மூன்றாவது ஆண்டாக இந்திய நாட்டின் தேசியக் கொடியை ஏற்றி வைக்கிறேன். விடுதலை வீரர்களைப் போற்றிப் பாராட்டுவதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு யாருக்கும் சளைத்தது அல்ல. நாட்டுக்காக உழைத்த தியாகிகளைப் போற்றிய இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். மொழிப்பற்று, இனப்பற்றுடன் நாட்டுப் பற்றையும் ரத்த உணர்வாகக் கொண்டவர்கள் நாம்.

சொன்னதைச் செய்வதும், சொல்லாமலே செய்வதும் நம்முடைய அரசின் செயல்பாடாக அமைந்துள்ளது.

இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் 195 பேருக்கு மாதம்தோறும் தியாகிகளுக்கான நிதி கொடையை தொடர்ந்து வழங்கி வருகிறது தமிழ்நாடு அரசு.

கடந்த ஆண்டு தியாகிகளுக்கான ஓய்வூதியம் 18 ஆயிரத்தில் இருந்து 20 ஆயிரம் ரூபாயாகவும், குடும்ப ஓய்வூதியம் 9 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது.

அதேபோல் விடுதலைப் போராட்ட வீரர்களின் வழித்தோன்றல்களுக்கு தொடர்ந்து உதவிகளை செய்து வருகிறது நமது அரசு.

விடுதலைப்போராட்ட தியாகிகளின் குடும்ப உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம் பத்தாயிரம் ரூபாயிலிருந்து, 11 ஆயிரம் ரூபாயாக இனி உயர்த்தி வழங்கப்படும் என்ற புதிய அறிவிப்பை இன்று வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமை செயலகக் கோட்டை முகப்பில் நடைபெற்ற சுதந்திர திருநாள் விழாவில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கினார். உடன் தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா உள்ளார்.

வாரிசு அரசியல் எங்கே இருக்கிறது?

மோடிக்கு மீராகுமார் பதிலடி!

புதுடெல்லி, ஆக.15–

பிரதமர் நரேந்திரமோடி எப்போது பார்த்தாலும் இந்தியாவை வாரிசு அரசியல் சீரழித்து வருகிறது என்று பேசி வருகிறார். இன்று அவர் நிகழ்த்திய சுதந்திர தின உரையிலும் இக்கருத்து இடம்பெற்றது. பிரதமர் மோடி க்கு முன்னாள் துணை பிரதமர் ஜெகஜீவன்ராமின் மகளும், காங்கிரஸ் மூத்த தலைவருமான மீராகுமார் பதிலடி கொடுத்துள்ளார். அவர் கூறியதாவது:–

இந்தியாவில் வாரிசு அரசியல் எங்கே இருக்கிறது? ஒரு தலைவரின் மகள் என்பதற்காகவோ அல்லது மகன் என்பதற்காகவோ ஒருவர் பதவிக்கு வந்துவிட முடியாது. பிரதிநிதிகளை மக்கள்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். மக்களின் விருப்பத்துக்கு ஏற்பவே ஒருவரின் உயர்வும், தாழ்வும் அமைகிறது. மக்கள் நினைத்தால் ஒருவர் சிகரத்தை எட்டலாம். அல்லது படுகுழியில் வீழலாம்.

வாரிசு என்பதற்காகவே யாரையும் மக்கள் அங்கீகரித்து விட மாட்டார்கள். தகுதியின் அடிப்படையிலேயே எடை போட்டுப் பார்த்து மக்கள் அங்கீகாரம் அளிக்கிறார்கள். இந்த அடிப்படை உண்மையை புரிந்து கொள்ளாமல் வாரிசு அரசியல் என்று விமர்சிப்பது அபத்தமானது, தர்க்கத்துக்கு புறம்பானது. இவ்வாறு மீராகுமார் கூறினார்.

கர்நாடகா அணைகளில் இருந்து

காவிரியில் 14,300 கனஅடி நீர் திறப்பு!

பெங்களூர், ஆக. 15–

கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

நீர் திறப்பை அதிகரிக்க வேண்டும் என தமிழகம் உச்ச நீதிமன்றத்தை நாடியதன் எதிரொலியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கே.ஆர்.எஸ் அணையில் இருந்து 5,300 கன அடி நீர் திறக்கப்பட்டு வந்த நிலையில் 9,300 கன அடியாக அதிகரித்துள்ளது. இந்நிலையில், இரு அணைகளில் இருந்தும் தற்பொழுது நீர் வெளியேற்றத்தின் அளவு 14,300 கன அடியாக அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கெங்கவல்லி பேரூராட்சியில் உள்ள இன்டேன் கேஸ் அலுவலகத்தில் சுதந்திர தின விழாவை முன்னிட்டு கெங்கவல்லி சப் இன்ஸ்பெக்டர் நிர்மலா கொடியேற்றி அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார். விழா ஏற்பாட்டை இன்டேன் கேஸ் உரிமையாளர் ஆண்டோ மஒரஆஸஸ் மற்றும் பணியாளர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பெண்களுக்கு இலவச பஸ் திட்டம் 'விடியல் பயணம்' என அழைக்கப்படும்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!!

சென்னை, ஆக.15–

பெண்களுக்கான இலவச பஸ் பயண திட்டம் இனி விடியல் பயணம் என அழைக்கப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கூறினார்.

இது தொடர்பாக அவர் சுதந்திரதின உரையில் கூறியதாவது:–

கடந்த இரண்டாண்டு காலத்தில் தமிழ்நாடு அடைந்த வளர்ச்சியை நீங்கள் பார்த்தால் ஒரேயொரு துறை வளர்ச்சியாக இல்லாமல் பல்துறை வளர்ச்சியாக அமைந்திருக்கும்.

அதனடிப்படையில் தான், காலம் காலமாக குடும்ப பாரத்தை சுமக்கின்ற பெண்கள், தங்கள் உழைப்பிற்கு எந்த மதிப்பும் இன்றி, இதுதான் தங்களுக்கு விதிக்கப்பட்டது என்று எண்ணியிருந்த நிலையை மாற்றிடும் வகையிலும், ஆணுக்கு இணையாகப் பெண்களுக்கும் உரிமை உண்டு என்பதை உணர்ந்து கொள்ளும் வகையில் மகத்தானத் திட்டத்தை அறிமுகப்படுத்த இருக்கிறோம்.

ஏறத்தாழ ஒரு கோடி மகளிர் மாதம்தோறும் பயனடையும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், அடுத்த மாதம் 15ஆம் நாள் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளன்று தொடங்கப்பட இருக்கிறது.

இந்தச் சமூகத்திற்காக வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரமாக இதனை வழங்க இருக்கிறோம். இந்தத் திட்டத்தின்கீழ் மகளிர்க்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் நேரடியாக அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட உள்ளது.

அரசுப் பள்ளியில் பயின்று, கல்லூரியில் சேரும் மாணவிகளுக்கு மாதம் ரூபாய் ஆயிரம் என்று, கடந்த நிதி ஆண்டில் மட்டும் சுமார் 2 லட்சம் இளம்பெண்களுக்கு 100 கோடி ரூபாய் உதவித்தொகை அளிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் சுமார் 2 லட்சத்து 11 ஆயிரம் உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு, சுமார் 350 கோடி ரூபாய் வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு மே மாதம் 7–ஆம் நாள் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டு கோட்டைக்கு வந்தபோது போட்ட முதல் கையெழுத்து என்பது மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து வசதி செய்து தரும் உத்தரவு தான்.

இந்தத் திட்டத்தின் கீழ் தினசரி 50 இலட்சம் மகளிர் பயணிக்கின்றனர். இதுவரை இந்தத் திட்டத்தில் சுமார் 314 கோடி முறை பெண்கள் அரசுப் பேருந்துகளில் பாதுகாப்பான பயணம் மேற்கொண்டு பயனடைந்துள்ளனர். இந்தத் திட்டத்தால் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 850 ரூபாய்க்கும் மேல் சேமிக்க முடிகிறது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானது, கோடிக்கணக்கான பெண்களுக்குப் பொருளாதார விடியலைக் கொடுத்துள்ளதன் அடையாளமான இந்தத் திட்டமானது, இனி 'விடியல் பயணம்' என்று பெயர் சூட்டப்படுகிறது. மகளிர் வாழ்க்கையில் இனி அவர்கள் பெறப் போகிற அனைத்து விடியலுக்குமான தொடக்கப் பயணமாக இது தொடரும்.

இவ்வாறு அவர் பேசினார்.

சுதந்திரப் போராட்ட

வீரர்கள் கண்ட கனவுகளின்படி இந்தியாவை உருவாக்குவோம்!

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி வாழ்த்து!!

சென்னை, ஆக .15–

இந்தியாவின் சுதந்திர தின விழா நாடு முழுவதும் இன்று கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, தனது சுதந்திர தின வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது,

நாட்டின் 76–வது சுதந்திர தினத்தன்று தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சி மற்றும் விரிவான நல்வாழ்வுக்கு அன்பான நல்வாழ்த்துகள். நமது சுதந்திரப் போராட்ட வீரர்கள் கண்ட கனவுகளின்படி இந்தியாவை உருவாக்க நாம் உறுதி ஏற்றுக் கொள்வோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தான்

ஓட்டலில் குண்டு வெடித்து 3 பேர் பலி!

கோஸ்ட், ஆக. 15–

தென்கிழக்கு ஆப்கானிஸ்தானின் கோஸ்ட் மாகாணத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்று குண்டு வெடித்த சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த சம்பவத்தில், குறைந்தது மூன்று பேர் உயிரிழந்தனர். மேலும், ஏழு பேர் படுகாயமடைந்தனர். குண்டுவெடிப்புக்கு யார் காரணம் என்பது உடனடியாகத் தெரியவில்லை. ஆப்கானிஸ்தானின் தலிபான் நிர்வாகம் இஸ்லாமிய அரசின் உறுப்பினர்களுக்கு எதிராக தாக்குதல்களை நடத்தி வருகிறது. இது சமீபத்திய மாதங்களில் நகர்ப்புற மையங்களில் நடந்த பல பெரிய தாக்குதல்களுக்கு பொறுப்பேற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழகம் முழுவதும்

1,016 ஆசிரியர்களுக்கு விரைவில் பதவி உயர்வு!

சென்னை, ஆக.15–

தமிழகம் முழுவதும் 1,016 ஆசிரியர்களுக்கு விரைவில் பதவி உயர்வு அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பொறுப்புக்கு பதவி உயர்வு பெற தகுதியானவர்களின் உத்தேச பட்டியல் கடந்த ஜனவரி மாதம் வயது மூப்பு அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.

இந்த நிலையில் அந்த பட்டியலில் அரசு நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதல் நிலை ஆசிரியர்களின் விவரங்கள் சரிபார்க்கப்பட்டு பதவி உயர்வுக்கான இறுதி பட்டியல் வெளியிடப்பட்டது. அரசு மேல்நிலைப்பள்ளிகளில் தலைமை ஆசிரியர் பொறுப்புக்கு பதவி உயர்வு பெற்றவர்களுக்கான தகுதிப் பட்டியலில் 1,016 பேர் இடம்பெற்றுள்ளனர்.

அதற்கான இறுதிப் பட்டியல் வெளியான நிலையில், அதன் விவரங்கள் மாவட்ட முதன்மை கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அதற்கான நடவடிக்கைகளை கல்வி அலுவலர்கள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இறுதிப்பட்டியலில் இடம் பெற்றவர்களுக்கு அதற்கான ஆணை விரைவில் வழங்கப்பட உள்ளது என்று கல்வித்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஆவணி மாத பூஜைக்காக

சபரிமலை கோவில் நடை நாளை திறப்பு!

திருவனந்தபுரம், ஆக .15

ஆவணி மாத பூஜைக்காக சபரிமலை கோவில் நடை நாளை திறக்கப்படுகிறது. சபரிமலை ஐயப்பன் கோவில் நடை மாதாந்திர பூஜைக்காக ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் 5 நாட்கள் திறக்கப்படும். அப்போது பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

அதன்படி ஆவணி மாத பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோவில் நடை நாளை(ஆக .16) மாலை 5 மணிக்கு திறக்கப்படுகிறது. சபரிமலை தந்திரி கண்டரரு ராஜீவரு முன்னிலையில் மேல்சாந்தி ஜெயராமன் நம்பூதிரி கோவில் நடையை திறக்கிறார். நாளை வேறு எந்த பூஜைகளும் நடைபெறாது. நாளை மறுநாள்(ஆக 17)) முதல் வருகிற 21ஆம் தேதி வரை தினமும் கணபதி ஜோமம், உஷ பூஜை, புஷ்பாபிஷேகம் உள்ளிட்ட வழக்கமான பூஜைகள் நடைபெறும்.

அரசுத்துறையில்

55 ஆயிரம் ஊழியர்கள் நியமிக்கப்படுவார்கள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் தகவல்!!

சென்னை, ஆக. 15–

அரசுத்துறையில் 55 ஆயிரம் ஊழியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டார்.

சென்னை கோட்டையில் தேசியக்கொடியை ஏற்றி வைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:–

திட்டங்கள் இல்லாத நாளே இல்லை என சொல்லக்கூடிய வகையில், அரசு அறிவிக்கும் திட்டங்களை கடைக்கோடி மக்களிடமும் கொண்டு போய் சேர்க்கின்ற

பெரும் பொறுப்பை ஏற்றிருப்பவர்கள் அரசு ஊழியர்கள். ஆட்சி சக்கரம் சுழல்வதற்கு அவர்களே காரணமாக இருக்கிறார்கள்.

எனவே, நடப்பாண்டுகளில் பல்வேறு துறைகளைச்சார்ந்த சுமார் 55 ஆயிரம் பணியிடங்களை நிரப்ப இருக்கிறோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த விழாவில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அனைவருக்குமான அரசு என்பதன் அடையாளமாக இது போன்ற திட்டங்களைச் சிந்தித்து சிந்தித்து செயல்படுத்தி வருகிறோம்.

கூட்டாட்சி இந்தியாவில் இணைந்திருக்கும் மாநிலங்கள் சுயாட்சி உரிமை கொண்டதாகச் செயல்பட வேண்டும் என்று பேரறிஞர் அண்ணாவும் தலைவர் கலைஞரும் தொடர்ந்து குரல் எழுப்பி வந்தார்கள்.

மக்களுக்கு நேரடித் தொடர்பு கொண்ட அனைத்தும் மாநிலப்பட்டியலில் இணைக்கப்பட வேண்டும். குறிப்பாக கல்வி, மாநிலப்பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும்.

அதைச் செய்தால்தான் நீட் போன்ற கொடூரமான தேர்வு முறை முற்றிலுமாக அகற்றப்பட முடியும்.

இவ்வாறு அவர் பேசினார்.

ரேஷன் பொருட்களை விற்றால் 6 மாதங்களுக்கு கார்டு ரத்து!

கர்நாடக அரசு எச்சரிக்கை!!

பெங்களூர், ஆக. 15–

ரேஷன் பொருட்களை விற்றால் 6 மாதங்களுக்கு ரேஷன் கார்டு ரத்து செய்யப்படும் என கர்நாடக அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ரேஷன் கடைகள் மூலமாக மக்களுக்கு இலவசமாகவும் மலிவு விலையிலும் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் ரேஷன் கடைகளில் வழங்கப்படும் அரிசியை சட்ட விரோதமாக வெளிச்சந்தைகளில் விற்பனை செய்யப்படுவதாக தொடர்ந்து புகார்கள் எழுந்துள்ளன. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கைகள் எழுந்தது.

இந்த நிலையில் அனைத்து மாநிலங்களிலும் அரசு பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதன்படி தற்போது கர்நாடக அரசு அன்னபாக்கிய யோஜனா திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் உணவு தானியங்களை வெளிச்சந்தையில் விற்பனை செய்தால் சம்பந்தப்பட்ட குடும்பத்தினரின் ரேஷன் கார்டுகள் அடுத்த ஆறு மாதங்களுக்கு முடக்கப்படும் என்று கர்நாடக மாநில உணவு மற்றும் குடிமை பொருள் வழங்கல் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

முதலமைச்சர் ஸ்டாலின்...

1–ம் பக்கத் தொடர்ச்சி

சேவையை நடத்தி வருகிறோம். இந்த திட்டம் இனி விடியல் பயணத் திட்டம் என்று அழைக்கப்படும். தொடக்கப்பள்ளிகளில் சிறுவர்–சிறுமியர்களுக்கு காலை உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது. இந்தத்திட்டம் ஆகஸ்ட் 25 முதல் அனைத்து பள்ளிகளுக்கும் விரைவுப் படுத்தப்படுகிறது.

இதற்காக இந்த ஆண்டு ரூ.404 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதன்மூலம் ரூ.15.75 லட்சம் சிறுவர்–சிறுமியர் பயனடைவர். சென்னை செங்காந்தள் பூங்காவுக்கு அருகே ரூ.25 கோடி செலவில் கலைஞர் நூற்றாண்டு பூங்கா அமைக்கப்படும்.

இவ்வாறு மு.க. ஸ்டாலின் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள், விருதுகள் வழங்கப்பட்டன.

தனேஜா ஏரோஸ்பேஸ் அன்ட் ஏவியேஷன் லிமிடெட்

பதிவு அலுவலகம்: பெல்கொண்டபள்ளி கிராமம், தளி சாலை, தேன்கனிக்கோட்டை பெல்கொண்டபள்ளி 635 114, தமிழ்நாடு

Phone/ Fax: 04347-233508/ 233414; Email: secretarial@taal.co.in

Website: www.taal.co.in; CIN: L62200TZ1988PLC014460

அறிவிப்பு

கம்பெனிகள் சட்டம், 2013–ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன் கீழ் கட்டமைக்கப்பட்ட விதிகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) 2015 மற்றும் முறையே 5 மே, 2020, 8 ஏப்ரல், 2020, 13 ஏப்ரல், 2020, 13 ஜனவரி, 2021, 05 மே, 2022 மற்றும் 28 டிசம்பர், 2022 (பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள்) தேதியிட்ட எம்சிஏ பொது சுற்றறிக்கை எண். 20/2020, 14/2020, 17/2020, 2/2021, 2/2022 மற்றும் 10/2022 ஆகியவற்றுக்கு இணங்க, ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்களின் நேரடி பங்கேற்பு இல்லாமல், **தனேஜா ஏரோஸ்பேஸ் அன்ட் ஏவியேஷன் லிமிடெட்டின் (நிறுவனம்) 34வது வருடாந்திர பொதுக்கூட்டம்** (AGM) **செப்டம்பர் 08, 2023 வெள்ளிக்கிழமை மதியம் 12:00 மணிக்கு** காணொளி காட்சி (VC) / பிற ஆடியோ காட்சி முறை (OAVM) மூலம் நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் கீழ், அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை கம்பெனி/வைப்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பப்பட்டு வருகிறது. உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் VC/OAVM மூலம் பங்கேற்கலாம்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள தீர்மானங்கள் மீது உறுப்பினர்கள் அவர்களின் வாக்குகளை அளிக்க தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதியை கம்பெனி வழங்குகிறது. மேலும், வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு (e-voting) வசதியையும் கம்பெனி வழங்குகிறது. மின்னணு வழிமுறையில் வாக்களிப்பதன் மூலம் அலுவல் பரிவர்த்தனை மேற்கொள்ளப்படும். தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் மின்னணு வாக்களிப்பு தொடர்பான விரிவான வழிகாட்டுதல்கள் உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வரும் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

சட்டப்பிரிவு 103ன் கீழ், VC/OAVM வசதி மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள் குறைந்தபட்ச எண்ணிக்கைக்காக கணக்கிடப்படுவார்கள்.

அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளம் www.taal.co.in மற்றும் பிஎஸ்இ இணையதளம் www.bseindia.com மற்றும் NSDL இணையதளம் evotingindia.nsdl.com–ல் கிடைக்கும்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவற்றை பெறுவதற்காக காகித வடிவில், அத்துடன் மின்னணு வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் மற்றும் கம்பெனி/வைப்பாளர்களிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத உறுப்பினர்கள், கம்பெனி பதிவாளரும், பங்கு மாற்று முகவருமான பிக்ஷேர் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டின் investor@bigshareonline.com அல்லது கம்பெனியின் secretarial@taal.co.in–ல் அவர்களின் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வருடாந்திர பொதுக் கூட்டத்தில் VC/OAVM மூலம் பங்கேற்பது மற்றும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் மின்னணு வாக்களிப்பு குறித்த வழிகாட்டுதல்கள் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு **செப்டம்பர் 05, 2023 (காலை 9.00 மணி) அன்று துவங்கி செப்டம்பர் 07, 2023 (மாலை 5.00 மணி)** அன்று முடிவடைகிறது. செப்டம்பர் 07, 2023 அன்று மாலை 5.00 மணிக்கு பின்னர் தொலைதூர மின்னணு வாக்களிப்பு அனுமதிக்கப்படமாட்டாது. கட்ஆப் தேதியில் அதாவது **செப்டம்பர் 01, 2023** அன்று உறுப்பினர்கள் பதிவேட்டில் அல்லது வைப்பாளர்களால் பராமரிக்கப்படும் நன்மைபயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பெயர் இடம்பெற்றுள்ள நபர் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு வசதியை பெறத் தகுதியுடையவர் ஆவார்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பை அனுப்பிய பின்னர் கம்பெனியின் உறுப்பினர்களாகும் நபர்கள், உள்நுழைவு முகவரி (login ID) மற்றும் கடவுச்சொல்லை (password) பெறுவதற்கு investor@bigshareonline.com அல்லது secretarial@taal.co.in–க்கு எழுதலாம்.

ஒரு உறுப்பினர் தொலைதூர மின்னணு வாக்களிப்பின் மூலம் தனது வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்திய பிறகும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்கலாம், ஆனால் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார். வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு வசதி கிடைக்கும்.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அது குறித்து, www.evotingindia.com–ல் உதவிப் பிரிவில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பிரிவு ("FAQs") மற்றும் மின்னணு வாக்களிப்பு பயனர் கையேட்டை பார்க்கவும் அல்லது helpdesk.evoting@cdslindia.com–க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

தனேஜா ஏரோஸ்பேஸ் அன்ட் ஏவியேஷன் லிமிடெட்டுக்காக

இடம்: புனே **அஸ்வினி நவரே**

தேதி: ஆகஸ்ட் 14, 2023 **கம்பெனி செயலாளர்**

மேகாலயாவில் நிலநடுக்கம்!

ரிக்டரில் 5.4 ஆக பதிவு!!

மேகாலயா, ஆக. 15–

மேகாலயாவில் நேற்று இரவு சுமார் 8.19 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது, ரிக்டர் அளவு கோலில் 5.4 ஆக பதிவாகியுள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தின் மையம் மேகாலயாவின் சிரபுஞ்சி யிலிருந்து தென்கிழக்கே 49 கி.மீ தொலைவில் வங்காள தேச எல்லையில் உள்ள சில்ஹெட் அருகே இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 16 கி.மீ ஆழத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் அதிர்வுகள் வடகிழக்கு பகுதி முழுவதிலும், வட மேற்கு வங்கத்தின் சில பகுதிகளிலும், அண்டை நாடான வங்கதேசத்திலும் உணரப்பட்டன. மேலும், நிலநடுக்கத்தின் எதிரொலியால் உயிர்சேதமோ, பொருட்சேதமோ இல்லை எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

ரோட்டரி கிளப் ஆப் சேலம் சார்பாக நடந்த சுதந்திர தின விழாவில் தலைவர் வக்கீல் ஜெகராஜ் தேசிய கொடி ஏற்றினார். உடன் செயலாளர் ராஜேஷ்குமார் மற்றும் உறுப்பினர்கள் உள்ளனர்.